# இயற்கை நமது நண்பன்.

அகிலன் மரத்தடியில் சோர்வாக அமர்ந்திருந்தான். அகிலனின் சோர்வைப் பார்த்ததும், மரம் அவனிடம் அகிலன்!.. அகிலன்!..எதற்காக இப்படி சோர்வாக இருக்கிறாய்? என்று கேட்டது. எனக்குத்தான் நண்பர்கள் யாருமே இல்லையே. என்று வருத்தத்துடன் கூறினான். நண்பர்கள் என்றால் யார்? எனக்கு உதவி செய்பவர்கள், பாதுகாப்பவர்கள், என்னுடன் விளையாடுபவர்கள்.

சரி... காலையில் என்ன சாப்பிட்டாய்? இட்லி. இட்லிக்கான அரிசியும் உளுந்தும் எப்படி வந்தது? விளை நிலங்கள் மூலம், அப்படியானால் விளை நிலம் உன் நண்பன் தானே! ஆமாம். பகலிலும், இரவிலும் ஒளி தருவது எது? சூரியனும், சந்திரனும். இவ்விருவரும் உன் நண்பர்கள் கிடையாதா? ஆமாம்! ஆமாம்! ஆனால்... இவர்கள் என்னுடன் விளையாட மாட்டார்களே!

பட்டம் கொண்டு வா.. காற்று நண்பனுடன் விளையாடு. இவர்கள்தான் இனிமேல் உன் நண்பர்கள். இவ்வளவு நேரம் என் நிழலில் பேசிக்கொண்டு இருக்கிறாயே!.. நானும் உனது..... நிச்சயமாக நீயும் என் நண்பன் தான்.

## மேற்கண்ட பத்தியைப் படித்து வினாக்கேற்ற விடையளி.

1. அகிலன் எங்கு சோர்வாக அமர்ந்திருந்தான்?

2. அகிலனின் நண்பர்களாக மரம் யாரைக் கூறியது?

3. எந்த நண்பனுடன் பட்டம் விளையாடுமாறு மரம் கூறியது?

4. நிழல் தந்த நண்பன் யார்?

5. நண்பர்கள் என்றால் யார்?

6. இந்தக் கட்டுரை கூறும் கருத்து என்ன?